# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2016

---------------------------------------------------------------

மஹாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சு

என்ஜீஜேஏ/6/ஆண்டறிக்கை 2016 2017.11.30

கௌரவ மஹாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சர்,
மஹாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சு,
82, "சம்பத்பாய"
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

கௌரவ அமைச்சர்,

**2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை**

---

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 32 (3) ஆம் பிரிவின் பிரகாரமும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழும் கீழ்க்காணும் ஆவணங்களை நான் சமர்ப்பிக்கின்றேன்.

1. 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் நிர்வாக அறிக்கை.
2. கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முறையாகக் கணக்காய்வு செய்யப்பட்ட இவ் அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்றும்.
3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நன்றி
உங்கள் உண்மையுள்ள

**கலாநிதி. டீ.எம்.டீ.ஓ.கே. திஸாநாயக்க**
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை

## எமது செயற்பணி

“இலங்கை - நீல மாணிக்கங்களின் மூலதனம்”

## எமது பிரதான பணி

“ தேசிய செல்வம் மற்றும் நலன்பெறுனர்களின் மகிழ்ச்சித் தோற்றுவிப்பிற்காக அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் பிரமாணத்தினூடாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் துறையின் சிறப்புத்தன்மையை எய்துதல்”

.

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின்**

**சபைப் பணிப்பாளர்கள்**

**ஆண்டு 2016**

| | **பெயர்** | | **சேர்ந்த திகதி** | **இராஜினாமாச் செய்த திகதி** |
|---|---|---|---|---|
| **1.** | திரு. அஸங்க சஞ்ஜீவ வெலகெதர – தலைவர், தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை | தலைவர் | 18.11.2015 | |
| **2.** | திரு. நவரத்ன பண்டார அலஹகோன் - தலைவர், தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | தலைவர் | 24.02.2015 | |
| **3.** | திரு. ஏ.கே.ஏ. செனவிரத்ன – மேலதிக செயலாளர் கைத்தொழில் வாணிப அமைச்சு | தலைவர் | 03.03.2015 | 19.12-2016 |
| **4.** | செல்வி. என். கொடகந்த – பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | உறுப்பினர் | 23.04.2015 | 28.09.2016 |
| **5.** | செல்வி. ரீ.எம்.ஜே.வை.பீ. பெர்னான்டோ – பரிமாற்றுக் கட்டுப்பாட்டாளர், இலங்கை மத்திய வங்கி | உறுப்பினர் | 20.11.2015 | |
| **6.** | செல்வி. இந்திரா மல்வத்த தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | உறுப்பினர் | 02.12.2015 | |
| **7.** | திரு. டபிள்யூ.ஏ. சூலாநந்த பெரேரா – பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கம் | உறுப்பினர் | 04.01.2016 | |
| **8.** | திரு. ஏச்.ஜீ.சுமனசிங்ஹ - பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | உறுப்பினர் | 09.11.2016 | |
| **9.** | திரு. ஜீ.எச்.ஏ. பெரேரா | உறுப்பினர் | 05.01.2016 | |
| **10.** | திரு. பீ.ஜீ. இந்திக குமுது சமரவீர | உறுப்பினர் | 26.05.2015 | |
| **11.** | திரு. ஏஸ்.ஏ.டீ. உபாலி சிறிலால் சுரவீர | உறுப்பினர் | 26.01.2016 | |
| **12.** | திரு. என்.பீ. வேகொடபொல | உறுப்பினர் | 30.01.2015 | 25.07.2016 |
| **13.** | திரு. ராஜா பீரிஸ் | உறுப்பினர் | 30.01.2015 | |

## சிரேஷ்ட முகாமைத்துவ விபரம்
## தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை
## ஆண்டு 2016

| பெயர் | | பதவி |
|---|---|---|
| திரு. அசங்க சஞ்சீவ வெலகெதர | பீஎஸ்சீ., எம்பில். (பேராதனை பல்கலைக்கழகம்) | தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் |
| திரு. பீ.என்.எம். விக்ரமசிங்ஹ | எஸ்எல்ஏஎஸ் - தரம் 1 | பணிப்பாளர் நாயகம் |
| திரு. கே.எல்.டீ. தயாசாகர | எம்.எஸ்சீ. (பேராதனை பல்கலைக்கழகம்) எப்ஜீஏ (லண்டன், டீ.ஜெம்.ஜீ. (ஜேர்மனி) எம்சீஏ (இலங்கை) | பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் இரத்தினக் கல்லியல்) |
| திரு. ஜீ.டபிள்யூ.அமரசிறி | எம்.எஸ்சீ. ஏன்ஜி (மைனிங்) ஐஈஎஸ்எல் (ஏஎம்) | பணிப்பாளர் (காணி, அகழ்வு, சுற்றாடல்) |
| திரு. ரீ.டீ. குலநந்த | பீஎஸ்சீ.(பப்ளிக் அட்மினிஸ்ரேஷன்) | பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி) |
| செல்வி. ஏ.என்.பீ. பெரேரா | ஏசீஏ. ஏப்எம்ஏஏரீ | பணிப்பாளர் (நிதி) |
| திரு. எஸ்.ஏ.ரீ. பண்டார | பீஎஸ்சீ., எம்.ஐ. கெம் சீ. பீஜீடீ (ஜெமொலொஜி) | பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் ஹால் மார்கிங்) |
| திரு. பீ.யூ.கே. தேநுவர | பீஎம்பீ பீ.கொம் (ஸ்பெ) எச்.என்.டீ.ஏ, எப்எம்ஏஏரீ | பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) |

## 01. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான 2016 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

---

2016 ஆம் ஆண்டு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் செயற்பாடுகளின் 22 ஆவது ஆண்டைக் குறிக்கின்றது. மீளாய்வாண்டிற்கான அதன் செயற்பாடுகள் இரத்தினபுரி தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பிலுள்ள அலுவலகம் மூலமாகவும், இரத்தினபுரி, எகலியகொட, மாத்தறை, நாவுல, மொனறாகல, கட்டுநாயக்க பிராந்திய அலகுகளின் மூலமாகவும் கட்டுநாயக்கா இரத்தினக்கல் ஏற்றுமதி நிலையம் மற்றும் உலக வர்த்தக மையத்திலுள்ள இரத்தினக்கல், ஆபரண பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் மூலமாகவும் நடாத்தப்பட்டுள்ளன.

## 02. அதிகார சபையின் பணிகள் :

(அ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்,

(ஆ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களை ஆரம்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்,

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான சந்தையைப் பயன்படுத்தலும் உலக சந்தைகளில் அத்தகைய இரத்தினக்கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான தேவையை ஊக்குவித்தலும்,

(ஈ) இரத்தினக்கல் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் ஆகியவற்றின் தொடர்பிலான சகல அம்சங்கள் மீதும் விசேடமாகச் வெப்பமூட்டற் பதனிடுகை, இரத்தினக்கல் பட்டை தீட்டல் ஆகியவற்றில், இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆளணியினர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படுவதை ஊக்குவித்தலும் அவற்றிற்கு ஆதரவளித்தலும்,

(உ) வளவாய்ப்புள்ள கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் நம்பிக்கையை உருவாக்குவதற்குத் தேவையான நடடிக்கைகளை எடுத்தல்,

(ஊ) சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்தலையும் இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களைச் சட்ட விரோதமாக அகற்றுதலையும் தடைசெய்தல்,

(எ) அரசாங்கத்திடம் சுரங்க அகழ்வு அல்லது இரத்தினக் கல் அகழ்தல் உரிமைகள் ஏதேனும் ஒதுக்கம் அல்லது பிற காரணத்தின் நிமித்தம் இருக்குமிடத்து அரசாங்க காணியில் அல்லது அரசாங்க காணிக்கு மேல் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் தீர்வு செய்யப்பட்ட காணியில் அல்லது காணியின் மேல் இரத்தினக்கற்கள் அகழ்வதற்கான உரிமையைப் பராதீனப்படுத்து வதற்குப் பொறுப்பான பிரத்தியேக அதிகாரசபையாகக் கடமையாற்றுதல்.

(ஏ) இரத்தினக்கற்கள், ஆபரணங்களின் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்ப மற்றும் பிற ஆலோசனைகளையும் உட்கட்டமைப்பு ஆதரவையும் வழங்குதல்,

(ஐ) எந்த பட்டியற்படுத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தின் நிருவாகத்தையும் அது பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக இருக்குமிடத்து மேற்கொள்ளுதல்,

(i) அது, இரத்தினக்கற்களின் அல்லது இரத்தினக்கல் கைத்தொழிலின் விடயத்தில் ஏற்புடைத்தானதாக இருக்குமிடத்து

அல்லது

(ii) இச் சட்டத்தின் கீழ் இவ்வதிகாரசபையானது அதன் அதிகாரங்கள், பணிகள், கடமைகளை செயற்படுத்துவதையும் நிறைவேற்றுவதையும் மேற்கொள்வதையும் இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவ்வண்ணம் செய்வது தேவையானதாக இருக்குமிடத்து,

(ஒ) இரத்தினக்கற்களின் சான்றுப்படுத்தலுக்கும் விலைமதிப்பற்ற உலோகங்களைப் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்தும் அலுவலகங்களை ஸ்தாபித்தல்,

(ஓ) உற்பத்தியாளரொருவரின் கோரிக்கையின் பேரில் விதத்துரைக்கப்பட்ட விதத்தில் ஹால்மாக் முத்திரை ஒன்றுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆபரணங்களுக்கு முத்திரையிடல்.

(ஔ) இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலினதும் ஆபரணக் கைத்தொழிலினதும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் கூட்டிணைப்பதற்குமாக இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இடையே தேவையான இணைப்பை ஏற்படுத்துதல்,

(க) இரத்தினக்கல் கைத்தொழிலும் ஆபரணக் கைத்தொழிலும் பணியாற்றுகின்ற ஆட்களின் வேலையின் நியதிகள், நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பாக அத்தகைய ஆட்களை உயிராபத்திலிருந்தும் உடல் ஆபத்திலிருந்தும் பாதுகாப்பதற்கு எடுக்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்தலும்.

## 3. நிதி

### 3.1 திரவத்தன்மை

இவ்வாண்டின் ஆரம்பத்தில் காசு, காசிற்குச் சமனானவைகள் ரூபா 55.89 மில்லியனாக இருந்தது. இவ்வாண்டின் இறுதியில் இது ரூபா

31.426 மில்லியனாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் முதிர்வு வரையுள்ள முதலீடுகள் (திறைசேரி உண்டியல்) ரூபா 552.962 மில்லியன் ஆகவும் ஆண்டின் இறுதியில் ரூபா 543.761மில்லியனாகவும் காணப்பட்டது.

ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள ஏனைய நிதிச் சொத்துக்கள் ரூபா 779.742 மில்லியனாகவும் ஆண்டின் இறுதில் இது ரூபா 687.613 மில்லியன் தொகையாகவும் காணப்பட்டது.

### 3.2 இலாபத் தகவு

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| மொத்த வருமானம் | 250.300 | 612.004 | 507.542 | 679.815 | 780.370 | 698.155 |
| மொத்த செலவினம் | 222.488 | 261.076 | 387.458 | 364.873 | 458.385 | 510.950 |
| **இலாபம் (வரிக்கு முன்னர்)** | **27.812** | **350.928** | **120.084** | **314.942** | **321.985** | **187.205** |

## 04. மனித வளங்கள்

தொழிசார் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் அதிகாரசபையின் பதவியினர் 274 பேர்களாக இருந்தனர். எமது குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன. ஆண்டிற்கான பதவியணியினருக்கான பயிற்சிக் கிரயம் ரூபா 3.8 மில்லியனாகும்.

**05. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்**

அதிகாரசபையின் பிராந்தியக் அலுவலகங்களாலும் கொழும்பு அலுவலகத்தாலும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்காகக் கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினக்கல் அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் | 4,687 | 5,956 | 6,565 | 5,928 | 5,151 | 5,240 |
| இரத்தினக்கல் வணிகர்கள் அனுமதிப்பத்திரங்கள் | 4,422 | 4,382 | 4,429 | 4,714 | 4,619 | 6,102 |
| பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரங்கள் | 179 | 177 | 192 | 199 | 204 | 243 |
| இரத்தினக்கல் ஏலவிற்பனை அனுமதிப்பத்திரங்கள் | 277 | 364 | 624 | 578 | 543 | 491 |
| **மொத்த அனுமதிப்பத்திரங்கள்** | **9,565** | **10,879** | **11,810** | **11,419** | **10,517** | **12,076** |

## 06. அதிகாரமளிக்கப்படாத இரத்தினக்கல் அகழ்வையும் சூழலுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதையும் கட்டுப்படுத்தல்

சட்ட விரோதமான இரத்தினக்கல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும் சூழலின் அழிவைத்தடுப்பதற்குமாக மீளாய்வுக் காலப்பகுதியில் இவ் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் பல்வேறு திடீர்ச் சோதனைகளை மீளாய்வுக் காலப்பகுதியில் நடாத்தியுள்ளனர். தண்டப் பணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 18.670 மில்லியனாகும். அதிகாரசபை, கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழிகளை மூடுவதற்கும் சேதமடைந்த ஆற்றோரங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## 07. விசேட இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்கள்

ஆண்டின் போது பகவந்தலாவை தோட்டத்திலும் சீதாவக்க கங்கையிலும் விசேட இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்களை மேற்கொண்டு கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 109.7 மில்லியன் ஆகும்.

## 8. சேவைகளும் பிற அபிவிருத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளும்

### 8.1 ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நடவடிக்கைகள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச வியாபாரச் சந்தைக் கண்காட்சிகளில் “இலங்கைக்கான களம்” அனுசரணையாளராகவும் ஒழுங்கமைப்பாளராகவும் இருத்தல்.

   i. சர்வதேச ஆபரணங்கள் டோக்கியோ (ஐதுவு) – ஜப்பான் - 20 – 23 சனவரி 2016 வரை

   ii. எச்கேரீடீசீ ஹொங்கொங் சர்வதேச வைரம், முத்து மற்றும் இரத்தினக்கற்கள் கண்காட்சி – 1 – 5 மார்ச் 2016 வரை

   iii. ஐரோப்பிய ஆபரணக் கண்காட்சி – ஜேர்மன் 19 – 22 மார்ச் 2016

   iv. ஜுவலரி சங்காய் கண்காட்சி – 5 - 9 மே 2016 வரை

   v. ஜேசீகே லாஸ் வெகாஸ் கண்காட்சி – 3 – 6 ஜுன் 2016 வரை

   vi. சீன குமிங் கண்காட்சி – 12 – 17 ஜுன் 2016 வரை

vii. 13 ஆவது சீன தெற்காசி எக்ஸ்போ 2016 – நநிங், குவாங்கி சுவாங் ஒட்டோனொமஸ் பிரொவின்ஸ் இன் சைனா – 11 – 14 செப்தெம்பர் 2016 வரை

viii. சர்வதேச ஆபரணங்கள் லண்டன் (IJL) - 6 - 8 செப்தெம்பர் 2016 வரை

ix. தனி நாட்டு கண்காட்சி ( ஸ்ரீ லங்கா ஜெம் பியஸ்ட்) - ஜப்பான் 24 – 26 ஒக்டோபர் 2016

x. சீன சர்வதேச இரத்தினக்கல் விற்பனைக் கண்காட்சி பீசிங் - 10 – 14 நவம்பர் 2016.

xi. சீன சர்வதேச தங்க, ஆபரணங்கள் மற்றும் இரத்தினக்கல் விற்பனைக் கண்காட்சி – சங்காய் 18 – 21 நவம்பர் 2016.

xii. வியட்நாம் சர்வதேச இரத்தினக்கல், ஆபரண விற்பனைக் கண்காட்சி – 9 – 13 நவம்பர் 2016 வரை

xiii. ஹொங்கொங் சர்வதேச இரத்தினக்கல், ஆபரணக் கண்காட்சி – 15 – 19 செப்தெம்பர் 2016 வரை

2. இலங்கையில் இருந்து வெளிநோக்கிய பிரதிநிதிகளை ஒழுங்குபடுத்துதல்.

i. பேர்மிங்ஹாம் (யூகே) இற்கு பிரதிநிதிகள் - 7 – 8 செப்தெம்பர் 2016 வரை

ii. வியட்னாமிற்கு பிரதிநிதிகள் - 2 – 8 ஒக்டோபர் 2016 வரை

iii. ரஷ்யாவிற்கு பிரதிநிதிகள் - 24 – 28 மே 2016 வரை

3. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு உள்நோக்கிய பிரதிநிதித்துவத்திற்காக உதவுதல்.

i. சீனாவின் தொல்பொருள் சேகரிப்புச் சங்கத்திலிருந்தான பிரதிநிதித்துவம் - 1 யூன் 2016

ii. நிப்போன் மாரு நிகழ்ச்சித்திட்டம் - 14 – 17 பெப்ரவரி 2016 வரை.

iii. ஆசிய பசுபிக் பிராந்திய சிவில் ஏவியேஷன் பணிப்பாளர் நாயகத்திடமிருந்தான பிரதிநிதித்துவம் - 1 ஆகஸ்ட் 2016

iv. 23 நாடுகளில் இருந்து எதிர்கால தூதுவர்களிடமிருந்தான பிரதிநிதித்துவம் - 4 ஆகஸ்ட் 2016.

v. இலங்கைக்கு தஜிகிஸ்தான் தூதர்களின் வருகை – 13 திசெம்பர் 2016.

04. உள்ளூர் விற்பனைச் சந்தைகளுக்கும் கண்காட்சிகளுக்கும் அனுசரணையளித்து ஒழுங்கமைத்தல்.

i. ஈஎன்சீஓ 2016 (எஹலியகொட தேசிய கல்லூரி) – 13 – 17 சனவரி 2016.

ii. இலங்கை சுற்றுலா நிகழ்வின் தங்க விழாக் கொண்டாட்டம் - 27 – 29 மே 2016 வரை

iii. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கல்விக் கண்காட்சி – 8 – 10 செப்தெம்பர் 2016 வரை

iv. எதிர்காலப் பசுமை 2016 (ரோயல் கல்லூரி பொலன்னறுவை) – 23 – 24 செப்தெம்பர் 2016 வரை

v. எதிர்காலப் பசுமை 2016(செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி) – 27 - 28 செப்தெம்பர் 2016 வரை

vi. ஸ்ரீ லங்கா நெக்ஸ்ட் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் - 17 – 19 ஒக்டோபர் 2016 வரை

vii. பேஸட்ஸ் ஸ்ரீ லங்கா – 1 – 4 செப்தெம்பர் 2016 வரை

viii. "ஜுவல்ஸ் 2016" இலங்கை இரத்தினக்கல்லியலாளர் சங்கத்தின் ஒழுங்கமைப்பு – 16 – 18 2016

ix. ஹாலியெல மத்திய கல்லூரி கண்காட்சி – 8 -9 திசெம்பர் 2016 வரை

05. ஆபரணக் கைத்தொழிலின் புதிய போக்கு மற்றும் தரங்கள் குறித்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்காக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

i. இரத்தினக்கல் கண்டுபிடிப்பு, ஆபரண வடிவமைப்பு மற்றும் ஆபரணத் தயாரிப்பு மீது 3 நாள் செயலமர்வு – 2 – 4 மார்ச் 2016 வரை

ii. ஆபரண வடிவமைப்பு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் - கம்பொல 2 ஒக்டோபர் 2016 .

06. கிராமப் பகுதியைச் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆபரணத் தயாரிப்பாளர்களுக்கு ஆபரணத் தயாரிப்பு உபகரணங்களையும் கருவிகளையும் வழங்குதல்.
ை. கம்பொல, கௌதுபிட்டியவில் புபுது ஆபரண உற்பத்திச் சங்கத்தைச் சார்ந்த ஆபரண உற்பத்தியாளர்களுக்காக உபகரணங்களையும் கருவிகளையும் விநியோகித்தல்.

07. வங்கியாளர்கள் மற்றும் தனியார் நிறுவகங்களின் தங்க இறக்குமதியை வசதியளித்து கண்காணித்தல்.

08. இரத்தினக்கல், ஆபரணச் சமூகத்திற்கு அவர்களது இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக (50,000 அமெரிக்க

டொலர்களுக்குக் குறைவான) அன்னிய செலாவணி வழங்கலை பரிந்துரைத்துக் கண்காணித்தல்.

09. இலங்கையின் இரத்தினக்கல், ஆபரணத் துறைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பிரஜைகளுக்காக தங்குமிட வீசாக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் புதுப்பித்துக்கொள்வதற்கும் உரிய அமைச்சிடம் பரிந்துரைக் கடிதங்களை வழங்குதல்.

10. இலங்கையின் இரத்தினக்கல், ஆபரணத் வியாபாரச் சமூகத்தின் தேவைப்பாட்டில் உரிய நாடுகளின் வீசா உத்தியோகத்தர்களுக்கு அவர்களது வீசாக்களை நடைமுறைப்படுத்துவதற்காக வீசாக் கடிதங்களை வழங்குதல்.

11. இலங்கையின் இரத்தினக்கல் ஆபரணக் களத்தின் அரசாங்க அனுசரணையாளராக ‘‘இலங்கை இரத்தினக்கல் ஆபரண பரிமாற்றல்’’ வசதியளித்து முன்னேற்றுதல்.

12. இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆபரணத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் ஆபரணப் பொருட்களை ஊக்குவித்து சந்தைப்படுத்துவதற்காக ‘‘இரத்தினதீப’’ காட்சியறை மற்றும் விற்பனைக் கூடத்தை முகாமைத்துவம் செய்து செயற்படுத்துதல்.

13. இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், கருவிகள், இயந்திர உபகரணங்களின் இறக்குமதிக்காக வரிச் சலுகைகளில் உதவியளித்தல்.

14. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களிற்காக தமது உத்தியோகபூர்வ மற்றும் வியாபார நோக்கில் அரசாங்க மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை சந்திப்பதற்கு உதவுதல்.

15. சர்வதேச சஞ்சிகைகளில் விளம்பரப்படுத்துதல்

- செரன்டிப் சஞ்சிகை
- ஜேஎன்ஏ

## 09. இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதிகள்

கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மீளாய்வாண்டான 2016 ஆம் ஆண்டிலும் இலங்கை இரத்தினக்கல், ஆபரண ஏற்றுமதிகளின் நிலையைக் காண்பிக்கின்றன.

| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| இரத்தினக்கல் ஏற்றுமதிகள் | 10,027.6 | 14,557 | 14,805 | 19,014 | 18,898 | 19,044 |
| இரத்தினக்கல் – என் எஸ்எஸ் விசேட செயற்திட்டம் | | | 1,915 | 3,179 | 2,792 | 1,813 |
| ஆபரண ஏற்றுமதிகள் | 1,732.3 | 2,444 | 2,194 | 2,467 | 2,192 | 2,240 |
| கெவுடா ஏற்றுமதிகள் | 146.7 | 225 | 122 | 140 | 102 | 103 |
| வைர மீள் ஏற்றுமதிகள் | 45,381.1 | 52,893 | 37,885 | 25,633 | 19,790 | 14,967 |
| வைர ஆபரண ஏற்றுமதிகள் | 375.8 | 324 | 229 | 258 | 315 | 243 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **57,663.5** | **70,443** | **57,210** | **50,691** | **44,089** | **38,410** |

அசங்க வெலகெதர
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

***2017-02-27***

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**
**25, கோல் பேஸ் டெரஸ், கொழும்பு - 3**
**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | **3** | 296,612,582.04 | 304,125,489 |
| குத்தகைக் காணி (காணியைப் பயன்படுத்தும் உரிமை) | **4** | 23,634.70 | 25,998 |
| அருவச் சொத்துக்கள் | **5** | 88,350.32 | 173,300 |
| ஏனைய சொத்துக்கள் | **7** | 371,939,330.58 | 371,939,331 |
| விற்பனைக்காக நிதிச் சொத்துக்கள் | **8** | 1,200,010.00 | 1,200,010 |
| மூலதன நடைமுறை வேலை | | 15,236,226.63 | 1,728,008 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | **14** | 20,000,000.00 | 20,000,000 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **705,100,134.27** | **699,192,137** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | **9** | 4,842,109.17 | 4,752,892 |
| பெறவேண்டியவைகள் | **10** | 46,149,307.55 | 41,901,500 |
| முதிர்வடைந்த முதலீடுகளில் உள்ளவை | **11** | 543,761,496.79 | 552,962,322 |
| வைப்புகளும் முற்பணங்களும் | **12** | 42,189,715.22 | 41,743,012 |
| ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **13** | 13,230,475.94 | 11,682,493 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | **14** | 687,613,759.72 | 779,742,163 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | **15** | 31,426,464.56 | 55,890,007 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **1,369,213,328.95** | **1,488,674,388** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **2,074,313,463.22** | **2,187,866,525** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**25, கோல் பேஸ் டெரஸ், கொழும்பு - 3**

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|---|
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **உரிமை மூலதனம்** | | | |
| பங்களிப்பு மூலதனம் | **16** | 30,000,000.00 | 30,000,000 |
| இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | **17** | 28,684,142.71 | 26,748,972 |
| ஆபரண அபிவிருத்தி நிதியம் | **18** | 56,075,262.67 | 46,558,763 |
| இரத்தினக்கல் பரிசூதிய நிதியம் | **19** | 45,657,241.09 | 38,150,635 |
| இரத்தினக்கல் மீள்மதியீட்டு ஒதுக்கம் | **20** | 355,074,648.00 | 355,074,648 |
| மீள்மதியீட்டு ஒதுக்கம் | **21** | 52,945,424.11 | 52,945,425 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானம் | | 699,402,926.43 | 735,816,080 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **1,267,839,645.01** | **1,285,294,522** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| இளைப்பாறல் கடன் கடப்பாடு | **22** | 34,742,935.55 | 39,083,127 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | **6** | 28,620,113.00 | 20,063,344 |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்கு மேல் முதிர்வுக் காலம் உள்ள தீர்ப்பனவுகள் | **23.1** | 7,748.00 | 9,208 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | 63,370,796.55 | 59,155,679 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்குள் முதிர்வுக் காலமுள்ள தீர்ப்பனவுகள் | **23.1** | 2,130.00 | 1,809 |
| செலுத்த வேண்டியவைகள் | **24** | 103,361,586.47 | 158,371,143 |
| இரத்தினக்கல் அகழ்விற்கான வைப்புகள் | | 395,764,276.64 | 390,976,995 |

| | | | |
|---|---|---|---|
| பெற்றவைப்புகளும் முற்பணங்களும் | **25** | 108,783,847.24 | 103,940,536 |
| நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் | **26** | 91,803,990.36 | 157,208,059 |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | **27** | 43,387,190.95 | 32,917,783 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **743,103,021.66** | **843,416,324** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **2,074,313,463.22** | **2,187,866,525** |

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் விதந்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டின் படி நிதிக்கூற்றுக்களின் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதிப் பணிப்பாளர் சான்றுறுதிப்படுத்துகின்றார்.

....................................................

**நிதிப் பணிப்பாளர்**

**21-39** ஆம் பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் **45-71** ஆம் பக்கங்களில் உள்ள குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைந்தவையாகும்.

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 23 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

.................................................... ..............................

**தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்** **பணிப்பாளர்**

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**25, கோல் பேஸ் டெரஸ், கொழும்பு - 3**

**2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|---|
| வருமானம் | **28** | 516,766,249.44 | 580,394,663 |
| ஏனைய வருமானம் | **29** | 80,103,643.41 | 92,356,674 |
| நிர்வாகச் செலவுகள் | **30** | (208,400,996.50) | (147,716,987) |
| ஆளணிச் செலவுகள் | **31** | (224,438,476.49) | (218,311,400) |
| ஊக்குவிப்புச் செலவுகள் | **32** | (78,110,483.00) | (92,358,312) |
| **செயற்பாட்டு இலாபம்** | | **85,919,936.86** | **214,364,637** |
| தேறிய நிதி வருமானம் | **33** | **101,285,601.14** | 107,620,077 |
| தேறிய நிதி வருமானத்தின் பின்னரான இலாபம் | | **187,205,538.00** | **321,984,714** |
| **திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு** | | **(175,000,000.00)** | **(75,000,000)** |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **12,205,538.00** | **246,984,714** |
| வருமான வரிச் செலவினங்கள் | **34** | (56,144,925.50) | (130,925,283) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **(43,939,387.50)** | **116,059,431** |
| ஆண்டிற்கான இலாபம் | | (43,939,387.50) | 116,059,431 |
| ஏனைய விபரமான வருமானம் | | - | - |
| **ஆண்டிற்கான விபரமான மொத்த வருமானம்** | | **(43,939,387.50)** | **116,059,431** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

## 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

-----------------------------------------------------------------------------------

## 1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 1.1 தயாரிப்பு அடிப்படை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் ("அதிகாரசபை") நிதிக்கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs). அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிச் சொத்துக்கள் அவற்றின் வரலாற்றுக் கிரயம், அவற்றின் விற்பனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படக் கூடிய நியாயப் பெறுமதிக்கு மாற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் (SLFRSs) விபரிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோக நடைமுறையில் அதன் நடுநிலைத் தன்மையை முகாமைத்துவம் பிரயோகிப்பதற்கு அது வேண்டப்படுகின்றது. உயர் மட்ட நடுநிலைத் தன்மைகள் அல்லது சிக்கல்கள் அடங்கிய பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகையில் அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2 கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் குறிப்பிடப்பட்டாலன்றி, சுருக்கமான நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம் முதல் SLFRSs மாற்றப்பட்ட திகதியின் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்று வரையான காலப்பகுதியின் போது தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

முன்னைய ஆண்டின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றின் வெளிப்படுத்தலும் வகைப்படுத்தலும் உரிய வகையில் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் நடப்பாண்டினதுடன் ஒப்பிடுவதற்கு ஏதுவான வகையிலும் திருத்தப்பட்டுள்ளது.

## 1.3 அன்னிய செலாவணிப் பரிமாற்றம்

### 1.3.1 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும் நிறுவகம் செயற்படும் முதல்நிலைப் பொருளாதாரச் சூழல் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்பட்டதாகும். அதிகாரசபையின் வெளிப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாக்களில் (ஏல்கேஆர்) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.3.2 கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற திகதியில் நிலவும் பரிமாற்று விகிதத்தைக் பயன்படுத்தி செயற்பாட்டு நாணயத்திற்கு அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பரிமாற்றப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிலிருந்து விளைபவற்றையும் அன்னிய செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் ஆண்டின் இறுதியிலான பரிமாற்றங்களிலிருந்தான அன்னிய செலாவணிப் பரிமாற்று இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காலக்கழிவுக் கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பான பரிமாற்றல் வேறுபாடுகளும் விபரமான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டடுள்ளன.

### 1.3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அங்கீகரிக்கப்பட்டு முகாமைத்துவத்தால் வேண்டப்பட்டவாறு இயங்கும் நிலைக்கும் தற்போதைய இடத்திற்கு கொண்டுவரப்படுவதற்காக நேரடியாக ஏற்கப்படும் எந்தக் கிரயத்தையும் உள்ளடக்கியுள்ளன.

1998 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2011 திசெம்பர் 31 இற்கு முன்னரான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLAS) படி தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றிலான மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டுவரப்பட்டுள்ளன.

மீள்பெறுமதியிடப்பட்ட தொகை மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் நிலவிய நியாயப் பெறுமதியுடன் பாரியளவில் ஒப்பிடப்பட்டமையால் அதனையே மீள்பெறுமதியிடப்பட்ட தொகையாக அதிகாரசபை ஏற்றுக்கொண்டிருந்தது. இதன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர் கிரயங்கள் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறில்லாத விடத்து அதிகாரசபைக்கு விடயத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதார நலன் பாய்ச்சப்பட்டு விடயத்தின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகையில் மாத்திரமே ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. சகல ஏனைய திருத்தங்களும் பராமரிப்பும், அவை உறப்பட்ட நிதிக் காலப்பகுதிக்கான விபரமான வருமானக் கூற்றில் சாட்டப்பட்டுள்ளன.

காணி பெறுமானத்தேய்விடப்படாததுடன் ஏனைய சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலப்பகுதியில் அவற்றின் கிரயம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தினை ஒதுக்கும் வகையில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்றது.

| **சொத்துக்களின் வகை** | | **வீதம்** |
|---|---|---|
| கட்டிடங்கள் | 30-50 வருடங்கள் | 2% - 3.33% |
| பாகமாக்கல் | 3 வருடங்கள் | 33.33 % |
| ஆய்வுகூடமும் ஆபரண ஆய்வு உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 4 வருடங்கள் | 25% |

| | | |
|---|---|---|
| கணனி உபகரணங்கள் | 5 வருடங்கள் | 20% |
| ஏனையவை | 10 வருடங்கள் | 10% |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் உயர்வானதெனில் அதன் அறவிடப்பட வேண்டிய தொகையிலிருந்து சொத்தொன்றின் தொகை உடனடியாக பதிவழிக்கப்பட வேண்டும்.

### 1.3.4 அருவகச் சொத்துக்கள்

கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருட்கள் அவை கொள்வனவு செய்யப்படுவதற்கு ஏற்பட்ட செலவினங்களினதும் குறித்த மென்பொருட்களையும் முறைமைகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் அடிப்படையிலிருந்து மூலதனமாக்கப்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட அருவகச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து திரண்ட காலக்கழிவு மற்றும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டே வெளிப்படுத்தப்படுகின்றன. இக் கிரயங்கள் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களிற்கிடையே காலக்கழிவு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கணனி மென்பொருள் | 5 ஆண்டுகள் | 20% |

கணனி மென்பொருட்களைப் பேணுவதற்கான கிரயங்கள் ஏற்கப்பட்ட ஓர் செலவினமாகக் கருதப்படுகின்றது.

### 1.3.5 குத்தகைக் காணி

குத்தகையில் உள்ள காணிகள் படிப்பெருக்க கடன்வாங்கு விகிதத்துடன் ஆரம்பத்தில் செலவிடப்பட்ட ஏதேனும் நேரடிக் கிரயங்களைக் கூட்டி குறைந்தளவு குத்தகைக் கட்டணத்தின் நிகழ்கால பெறுமதிக்குச் சமனான ஓர் தொகையில் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டு பின்னர் குத்தகைக் காணிகள் காலக்கழிவுக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. குத்தகைக் காணிகள் குத்தகைக் காலப்பகுதியில் காலக்கழிவிடப்படுகின்றன.

| | | வீதம் |
|---|---|---|
| குத்தகைக் காணி | 30 ஆண்டுகள் | 3.33% |

### 1.3.6 நிதியல்லாச் சொத்துக்களின் சேதம்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் அதிகாரசபை அதன் ஆதன பொறி மற்றும் இயந்திரங்களினதும் அருவகச் சொத்துக்களினதும் தொகைகளை அச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளமைக்காக ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக மீளாய்வுசெய்கின்றது. அத்தகைய ஏதேனும் அறிகுறிகள் இருப்பின் சேத இழப்பின் அளவை நிர்ணயிப்பதற்கு சொத்துக்களின் திரும்பப் பெறத்தக்க தொகை மதிப்பிடப்படுகின்றது.

நியாயக் கிரயங்களிலிருந்து விற்பனைக்கான கிரயங்களைக் கழித்து வரும் பெறுமதியையும் பயன்பாட்டுப் பெறுமதியையும் ஒப்பிடுகையிலான கூடிய பெறுமதியே திரும்பப் பெறத்தக்க தொகையாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் பணப் பெறுமதியீட்டுக் காலத்தின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் சீராக்கப்படாத குறித்த சொத்துக்களின் இடர்களையும் பிரதிபலிக்கும் முன் வரிக் கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் மதிப்படப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் தொகையைப் பார்க்கிலும் மதிப்பிடப்பட்ட திரும்பப் பெறத்தக்க தொகை குறைவாக இருப்பின் சொத்தின் கொண்டுள்ள பெறுமதி அதன் மீளப் பெறத்தக்க தொகைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக சேத இழப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 நிதிச் சொத்துக்கள்

### 1.4.1 வகைப்படுத்தல்

#### (அ) வகைப்படுத்தல்

அதிகாரசபை ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களை அவற்றின் வகைப்படுத்தலில் நிர்ணயிப்பதுடன் பின்வருமாறு அதன் நிதிச்சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

I. கடன்களும் பெறவேண்டியவைகளும்

II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

#### I. கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஓர் தொழிற்படு சந்தையில் கோரப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான வழிவரா நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறவேண்டியவையுமாகும். இறுதி அறிக்கைக் காலத்தை அடுத்து 12 மாதங்களுக்கு மேலான முதிர்வுக்காலத்தைக் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுபவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவையும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரசபையின் கடன்களும் பெறவேண்டியவையும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை, அரசாங்க பிணைகளின் மீள்கொள்வனவு, முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்குகின்றன.

## II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் வழிவராதவையாக ஒன்றில் இவ்வகையில் நிர்ணயிக்கப்பட்டவையாகவோ அல்லது ஏனைய வகைகளில் வகைப்படுத்தப்படாதவையாகும். முதலீடு முதிர்வடைந்தாலோ அல்லது அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் போது 12 மாதங்களிற்கிடையில் அகற்றப்படுவதற்கு முகாமைத்துவம் கருதினாலன்றி இவை நடைமுறையல்லாச் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் நீண்டகால பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

## III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் வழிவராத நிதிச் சொத்துக்களாகும். இவை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளாவதுடன் முதிர்வு நிர்ணயிக்கப்பட்டவையாகும். சாதகமான கருத்தையும் முதிர்வு வரை அவற்றை அதிகாரசபை வைத்திருப்பின் முதலீடுகள் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

நடைமுறை அல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் முதிர்வுக் காலப்பகுதி 12 மாதங்களுக்கு மேற்பட்டாலன்றி நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படும். இவ்வகைப்படுத்தலில் நியமிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் அதிகாரசபை தற்போது முதலீட்டைக் கொண்டுள்ளது.

## 1.4.2 ஏற்பிசைவும் ஆரம்ப அளவீடும்

கடன்கள் மற்றும் பெறவேண்டியவையாக வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் அதிகாரசபை கொடுக்கல் வாங்கலை ஆரம்பிக்கும் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏனைய நிதிச்சொத்துக்கள் நிதிக் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு ஓர் தரப்பாக அதிகாரசபை உள்ளாகும் வர்த்தகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் நிதிச் சொத்து அதன் நியாயப் பெறுமதி கூட்டப்பட்டு ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் நேரடியாகப் பெறப்படும் கொடுக்கல் வாங்கல் கிரயங்களில் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் பெறுவனவு உரிமைகள் முடிவடைகையில் அல்லது மாற்றப்படுகையிலும் அதிகாரசபை பாரியளவில் சகல இடர்களையும் நிதிச்சொத்துக்களின் உரிமையின் அன்பளிப்பையும் மாற்றியிருப்பின் நிதிச்சொத்துக்கள் அடையாளமிடப்படாது விடப்படுகின்றன.

## 1.4.3. அடுத்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள்

### I. கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையில் சேதத்திற்கான ஏற்பாட்டை கழித்து காலக்கழிவு கிரய முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

### II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகள் அவற்றின் நியாயப் பெறுமதி நம்பகரமான முறைமையில் நடைமுறையில் மதிப்பிடப்பட முடியாமையால் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்களாக அளவிடப்படுகின்றன.

### III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் பின்தொடர்ந்து ஆக்கபூர்வமான வட்டி முறையில் காலக்கழிவுக் கிரயத்தில் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயமானது கொடுக்கல் வாங்கல் கிரயங்களினது கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

## 1.4.4 நிதிச் சொத்துக்களின் சேதம்

### I. காலக்கழிவுக் கிரயத்தில் பேணப்படும் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் நிதிச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றுகள் இருப்பின் அதிகாரசபையால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஓர் நிதிச்சொத்து நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடப்பட முடியுமாயின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கம் செலுத்துமாயின் அவ் இழப்பு சம்பவம் (ஓர் ‘இழப்பு சம்பவம்’) அல்லது சம்பவங்கள் சொத்தில் ஆரம்ப அடையாளம் காணலை அடுத்து நிகழும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்தின் நடுநிலைச் சான்று இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச்சொத்து சேதமடைவதுடன் சேத இழப்புகளும் ஏற்படுகின்றன.

காலக்கழிவு கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் முதிர்வு வரையான முதலீடுகளுக்காக சொத்து கொண்டுசெல்லல் தொகைக்கும் எதிர்கால காசுப்பாய்ச்சல் மதிப்பீட்டு நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு (செலவிடப்படாத எதிர்கால கடன் இழப்புகள் தவிர) நிதிச் சொத்துக்களின் மூல தாக்கல் வட்டி விகிதத்தில் கழிக்கப்பட்டு இழப்புத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

தொடர்ந்துவரும் காலப்பகுதியின் போது சேத இழப்புகளின் தொகை குறைந்து அக்குறைவு சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து ஓர் நிகழ்விற்கு பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீட்பு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

நிதிச்சொத்து சேதமடைந்தமைக்கு நடுநிலைச்சான்று உள்ளதா என்பது பற்றி அதிகாரசபை அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் மதிப்பிடுகின்றது. கோரப்படாத மூலதன முதலீடுகளுக்காக அதன் கிரயத்திலும் பார்க்க ஓர் முக்கிய அல்லது தாக்கமான வீழ்ச்சியும் சொத்துக்கள் சேதமுற்றமைக்கு சான்றாக உள்ளன. கோரப்படாத முதலீடுகளுக்கான அத்தகைய சான்று இருக்கையில் சேத இழப்பு நிதிச் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் அதே நிதிச் சொத்திற்கான மீட்பு விகித நடைமுறைச் சந்தையில் கழிவிடப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக சேத இழப்புத் தொகை அறவிடப்படுகின்றது. அத்தகைய சேத இழப்புக்கள் மீட்கப்படுவதில்லை.

## 1.5 இருப்பு

இருப்பு கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதியில் எது குறைவானதோ அப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் உள் முதல் வெளி முறையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. இருப்புகள் நுகர்வுப் பொருட்களையும் காகிதாதிகளையும் உள்ளடக்கியனவாகும்.

## 1.6 பெற வேண்டியவை

பெற வேண்டியவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (பட்டியல் பெறுமதியில்) ஏற்பிசைவு செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து ஆரம்ப பட்டியல் பெறுமதியிலிருந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் எதிர்பார்க்கபடுவதால் சேதத்திற்கான ஏற்பாடு கழிக்கப்பட்டே அளவிடப்படுகின்றது. ஆகவே நாணயப் பெறுமதிக் காலம் முக்கியமானதல்ல.

ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவிலும் அதிகாரசபை பெறவேண்டிய இழப்பு நட்டம் ஏற்பட்டுள்ளனவா என்பதற்கு நடுநிலைச் சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அதிகாரசபையின் கடந்தகாலக் கொடுப்பனவுச் சேகரிப்பு அனுபவங்களையும் தாமதக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையையும் பெறவேண்டியவற்றிற்கான இழப்பின் நடுநிலைச் சான்றுகள் உள்ளடக்குகின்றன. இழப்பின் நடுநிலைச் சான்று இருப்பின் மட்டுமே பெறவேண்டியவை இழக்கப்படுவதுடன் இழப்பு நட்டங்களும் ஏற்கப்படுகின்றன. பெறவேண்டியவை இழப்பிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

## 1.7 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசிற்குச் சமமானவைகளில் கையிலுள்ள காசு, வங்கியில் அழைப்பாக உள்ள வைப்புகள், மூன்று மாத அல்லது அதனிலும் குறைவான அடிப்படை முதிர்வைக் கொண்ட உயர் திரவத்தன்மையிலான ஏனைய குறுங்கால உயர் திரவத் தன்மையான முதலீடுகளையும் உள்ளடக்கும்.

## 1.8 பங்களிப்பு மூலதனம்

அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் கொண்டுள்ளது.

## 1.9 நிதிப் பொறுப்புகள்

அதிகாரசபை நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. அதிகாரசபையின் ஏனைய நிதிப் பொறுப்புகள் செலுத்த வேண்டியவை, அனுமதிப்பத்திரக் கட்டண முற்பெறுவனவு, இரத்தினக்கல் பெறப்பட்ட வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புகளை உள்ளடக்கும். ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் இந்நிதிப் பொறுப்புகள் மூலப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

அதிகாரசபை நிதிப் பொறுப்பை அதன் ஒப்பந்தமயக் கடப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதும், இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது முடிவுற்றதும் ஏற்பிசைவு செய்வதில்லை.

## 1.10 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் பிற்போடப்பட்ட வரியைக் கொண்டவையாகும். ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புபட்டவற்றவை தவிர்ந்த ஏனையவை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இவ் விடயத்தில் ஏனைய விபரமான வருமானத்திலும் வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அதிகாரசபைக்கு உரித்துடைய தொழிற்படு மற்றும் உழைக்கப்பட்ட வரி வருமானத்தில் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் வலிதான வரிச் சட்டங்களின் அடிப்படையில் நடைமுறை வரிக் கட்டணம் கணிப்பிடப்படுகின்றது. உரிய வகையில் வரி அதிகாரிகளுக்கு செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் தொகைகளின் அடிப்படையில் முகாமைத்துவம் ஏற்பாடுகளை உருவாக்குகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் அவற்றின் கொண்டுசெல்லல் பெறுமதிகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளில் பிற்போடப்பட்ட வரி நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கணக்கீடு அல்லது வரிக்குட்பட்ட இலாபநட்டங்களைத் தாக்காத கொடுக்கல்வாங்கல் வேளையில் ஓர் வியாபார பிணைப்பு அல்லாத ஓர் கொடுக்கல்வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து உருவாவதாயின் பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரி அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் நிலவும் வரி விகிதங்களில் நிர்ணயிக்கப்பட்டு பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகையில் அல்லது தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால வரியிடத்தக்க இலாபத்தின் தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தப்படக்கூடிய நிலையின் அளவிற்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நடைமுறை வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடைமுறை வரிப் பொறுப்புகள் எதிரீடு செய்யப்படுவதற்கான உரித்து சட்ட ரீதியாக இருக்குமிடத்தும் அதே வரி அதிகாரங்களால் வருமான வரி விதிப்பனவுகளுடன் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்புபடுகையிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

## 1.11 ஊழியர் நலன்கள்

### (அ) தெளிவூட்டப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பின்னைய தொழில் நலனுக்காக அதிகாரசபையால் வேறு ஓர் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஓர் நிலையான பங்களிப்புகளைச் செலுத்துவதே தெளிவாக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். அதிகாரசபை எதிர்காலப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது தொடர் கடப்பாடுகளைக் கொண்டதல்ல. பங்களிப்புகள் அவை செலுத்தப்பட வேண்டிய நிலைக்குட்படுகையிலேயே ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

| | குத்தகைக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான பொறுப்பு மீதான நிதிக் கிரயம் | (25,186.00) | (24,992.00) |
| | | **(25,186.00)** | **(24,992.00)** |
| | | **101,285,601.14** | **107,620,076.83** |

| | 2016 | 2015 |
|---|---|---|
| **34 வருமான வரிச் செலவினங்கள்** | | |
| நடைமுறை வரிச் செலவினங்கள் (குறிப்பு 34.1) | 46,801,384.00 | 127,866,235.62 |
| கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டுச் சீராக்கம் | 786,772.50 | (80,923.30) |
| பிற்போட்ட வரிக் கட்டணம் /(மீட்பு) (குறிப்பு 6) | 8,556,769.00 | 3,139,971.12 |
| | **56,144,925.50** | **130,925,283.44** |

**34.1 உற்பத்திப் பொருளின் கணக்கீட்டு இலாபத்தினதும் நடைமுறை வரிச் செலவினத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| **வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம்** | **187,205,538.00** | **321,984,714.00** |
| ஒட்டுமொத்த அனுமதியற்ற விடயங்கள் | 37,106,809.00 | 41,953,526.00 |
| ஒட்டுமொத்த அனுமதியான விடயங்கள் | (66,401,376.00) | (61,552,099.00) |
| ஏனைய வளங்களிலிருநதான வருமானம் | (140,099,856.00) | (145,838,399.00) |
| **வியாபார மற்றும் வர்த்தகத்திலிருந்தான இலாபம் / (நட்டம் )** | **17,811,115.00** | **156,547,742.00** |
| வரிக்கு உட்பட்ட ஏனைய வருமானம்- வட்டி வருமானம் | 139,919,856.00 | 145,658,399.00 |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | **157,730,971.00** | **302,206,141.00** |
| விதிப்பனவுகளுக்கு உட்பட்ட கொடுப்பனவு | (157,730,971.00) | (75,000,000.00) |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்ட வரி இழப்புகள் | - | (1,634,439.00) |
| **மதிப்பிடப்பட்ட வருமானம் / வரி வருமானம்** | - | **225,571,702.00** |
| நியதிச்சட்ட வரி விகிம் 28% படி | - | 63,160,077.00 |
| விதிக்கப்பட்ட வரி | | |
| மொத்த பங்கிலாபத்தின் மீதான வரி | 46,801,384.00 | 64,706,159.00 |
| **ஆண்டிற்கான வழமையான நடவடிக்கைகள் மீதான நடைமுறை வரி** | **46,801,384.00** | **127,866,236.00** |

## 35. மூலதன மற்றும் ஏனைய கடப்பாடுகள்

அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் சபைப் பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பொருண்மையான மூலதனச் செலவினங்களோ அல்லது ஏனைய நிதிக் கடப்பாடுகளோ இருக்கவில்லை. எஹலியகொட கட்டிட நிர்மாணிப்பு தொடர்பான ஆலோசனை மற்றும் ஏனைய செலவினங்களிற்காக நடைபெறும் வேலை மீதான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 36. அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்

2016 இன் இறுதியில் உள்ளவாறு இடம்பெற்ற ஹதுவ வத்த காணி கேள்வி பொருண்மையாக்கப்படவில்லை. திசெம்பர் 31 ஆம் திகதியான அறிக்கையிடற் திகதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கும் இடையே இந் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கங்கள் தேவையான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

## 37. நிகழத்தக்க பொறுப்புகள்

வழமையான வியாபார நடவடிக்கையின் போது எழும் சட்டக் கோரல்கள் தொடர்பாக அதிகாரசபை நிகழத்தக்க பொறுப்புகளைக் கொண்டுள்ளது. ஓர் ஏற்பாடாக ஏற்பிசைவு செய்யப்பட்டாலன்றி (குறிப்பு 27), இக் கோரல்கள் நடுநிலைத் தன்மையற்றவையெனவும் அவற்றின் தீர்ப்பனவிற்காக வளங்களின் வெளிப்பாய்ச்சல் பின்தங்கியதாகவுமே முகாமைத்துவம் கருதியுள்ளது. இம் மதிப்பீடானது அதிகாரசபையின் நீதிப் பிரிவின் ஆலோசனையுடன் இணங்குவதாகும்.

## 38. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

அதிகாரசபையின் தொடர்புடைய தரப்பினரில் இலங்கை திறைசேரி, அரச சார்பான நிறுவனங்கள், அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ தரப்பினர் உள்ளடங்குவர்.

## 38.1 முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS.24 “தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களின” படி தொடர்புடைய தரப்பினரின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிடல், வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்குப் பொறுப்புடையவர்களாவர். இதன் படி, பணிப்பாளர் சபை முக்கிய முகாமைத்துவ நபர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.**

| | **2016** | **2015** |
|---|---|---|
| ஊதியமும் ஏனைய குறுங்கால ஊழியர் நலன்களும் | 1,200,000 | 1,200,000 |
| பின் உழைப்பு நலன்கள் | - | - |

## 38.2 தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபை மேற்கொள்ளும் முக்கியமான தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறாகும்.

| தொடர்புடைய தரப்பினர் | அறிக்கையிடற் காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | மீதி முதிர்வு வரை/ (முதிர்விலிருந்து) |
|---|---|---|---|
| அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் | நிலையான வைப்புக்களில் முதலீடுகள் | 50,000,000.00 | |
| | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான மீளப் பெறல்கள் | (110,000,000.00) | 1,213,868,230.00 |
| | ரீப்போ முதலீடுகள் | - | - |
| | ரீப்போக்களின் மீளப் பெறல்கள் | 20,000.00 | - |
| ஏனைய அரச சார்பு நிறுவனங்கள் | பங்கு முதலீடுகள் | - | - |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஐஈஎன்/டி/என்ஜீஜேஏ/1/16 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2017 யூலை 28

தலைவர்,
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம், வருமானம் மற்றும் செலவினம் இலங்கை கணக்கீட்டு நியமங்களால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட முடியாத போதிலும் இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் செயற்திட்டங்களின் ரூபா 173,293,834 தொகையான மொத்த வருமானத்தில் ரூபா 3,618,510 தொகையான ஊழியர் ஊக்குவிப்புக்கள் மற்றும் ரூபா 74,611,635 தொகையான மூன்றாம் நபர் கொடுப்பனவுகள் வருமானத்திற்கெதிராக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 95,063,689 தேறிய வருமானம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) 66 ஆம் பிரிவிற்கு முரணாக காலி நிலையத்திற்கான ரூபா 916,667 தொகையான 3 ஆண்டுகளிற்கான கட்டிட வாடகை முற்கொடுப்பனவின் முழுத் தொகையும் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

---

நியமத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 7,526,234 தொகையான முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக ரூபா 36,310,655 கிரயமுடைய 14 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாராம் மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 17**

---

நியமத்தின் பிரகாரம் குத்தகை முறையில் கொள்வனவு செய்யப்பட்ட 03 வாகனங்களுக்குரிய நியாயப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,228,028 தொகையான குத்தகைத் தவணைப் பணத்தின் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

---

நியமத்தின் 57 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்கு கொண்டுவரப்பட வேண்டிய ரூபா 3,908,209 தொகையான ஊழியத்தின் பின்னரான நலன்களிலிருந்து விளைந்த உண்மை இலாபம் (Acturial Gain) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை மீதான செலவினத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம், கட்டிடங்கள் 02 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய அதேநேரம் பிரிவினைகள் 33.33 சதவீதத்தில் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், கட்டிடங்கள் மற்றும் பிரிவினைகள் ஒரே விடயமாக கருதப்பட்டு 02 சதவீதத்தில் ரூபா 1,595,325 பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன.

(ஆ) சேதங்களிற்கான நட்டங்களின் சீராக்கங்களிற்காக சபையால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், ஒவ்வொரு கணக்கீட்டுக் காலப்பகுதியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் கற்பனைச் சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதி மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் உரிய சொத்துக்களின் சேதங்களிற்கான நட்டமாக ரூபா 6,531,637 ஆன சமமான தொகை 2013 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாவுல பிராந்திய அலுவலகத்தின் திருத்த வேலை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட வேலையின் கிரயம் ரூபா 4,774,641 தொகையாக காணப்பட்ட போதிலும் அது நடைமுறை வேலை கணக்கில் ரூபா 10,915,256 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 6,140,615 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல வருடங்களுக்கு முன்பு குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது பாவனையில் காணப்படுகின்ற 2 மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 நிலையான வைப்புக்கள் மீது பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 100,816 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2 கணக்கு விடய மீதிகளின் பெறுமதியை ஆரம்ப அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 4,252,776 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீதாவக ஆற்றில் இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் செயற்திட்டம் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகாரச்சட்டமானது இரத்தினக்கற்களை நேரடியாக அகழ்ந்தெடுப்பதற்கான அதிகாரங்களை அதிகாரசபைக்கு வழங்கியிருக்காத போதிலும் சீதாவக ஆற்றில் இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் நடவடிக்கைகள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முறையான அங்கீகாரம் மீது வேலை மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளியிலுள்ள தொழில்முயற்சியாளர்களுடாக செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களை கோரும் விளம்பரத்தை புதினப்பத்திரிகையொன்றில் பிரசுரிப்பதற்காக ரூபா 160,845 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையே செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தியிருந்ததால் அச் செலவினம் அதிகாரசபைக்கு நட்டமாக இருந்தது.

(iii) இரத்தினக்கற்களை அகழ்ந்தெடுப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பவற்றின் அங்கீகாரங்கள் மற்றும் சிபாரிசுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்கீகாரம் மற்றும் வெளிச் செயற்திட்ட மதிப்பீடுகளின்றி செயற்திட்ட மேற்பார்வைக்காக வெளித்தரப்பினர்களிற்கு நாளொன்றிற்கு ரூபா 1,000 வீதம் ரூபா 949,000 தொகை 2016 ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியரொருவருக்கு ரூபா 6,000 வீதம் ரூபா 1,600,000 தொகை தலைவரின் அங்கீகாரம் மீது புதுவருடப் படியாக மீளாய்வாண்டின் போது நலன்புரிச் சங்கத்தினூடாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 205,216 கூட்டுத்தொகையான 03 வருடங்களிற்கு மேற்பட்ட மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ரூபா 11,743,761 தொகையான பிடித்துவைத்தல் வரியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 14(1)(எ) பிரிவு | சீதாவக ஆற்றில் இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் அமைச்சரவையின் ஒத்துழைப்பின்றி வெளித்தரப்பினர்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் ஆரம்ப 2 கட்டங்களில் கடந்த 10 மாத வேலைகள் சுற்றாடல் பாதுகாப்பு அங்கீகாரமின்றி அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) 18(1) ஆம் பிரிவு | காணியொன்றில் "இரத்தினக்கல் அகழும் உரித்தானது ஏலத்தின் மூலம் கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பமொன்றில் அவரினால் அந்த ஏலத்தின் |

| | |
|---|---|
| | போது செலுத்தப்பட்ட விலையில் அந்தக் காணியிலிருந்து பெறப்படுகின்ற இரத்தினக்கற்களுக்காக ஏதேனுமொரு அரசிறை உள்ளடக்கப்பட்டுள்ளதாக கருதப்பட வேண்டுமா என்பது" காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை அந்த அரசிறை எத்தனை சதவீதம் என தீர்மானித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது காணிகளின் ஏல விற்பனையிலிருந்து ரூபா 127,812,509 அளவிலான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்த போதிலும், அதில் எதுவித அரசிறைப் பணமும் திறைசேரிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 20(2) ஆம் பிரிவு | அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போதும் நிறைவேற்றும் போதும் நடைமுறையில் அதிகாரசபையால் பெறப்பட்ட அனைத்துப் பணமும் அதிகாரசபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக திடீர் சோதனைகள், களப் பரீட்சிப்புக்கள் தொடர்பான வருமானமும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 52,655,943 வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது ரூபா 543,761,497 தொகை திறைசேரி உண்டியல்களிலும் ரூபா 670,106,733 தொகை நிலையான வைப்புக்களாக அரச வங்கிகளிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 183,548 தொகையான கெவுட இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரதிகள் உரிய அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 43,939,387 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 116,059,431 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 159,998,818 ஆன வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் இரத்தினக்கல் விற்பனை வருமானம் ரூபா 68,930,542 ஆல் அதிகரித்த போதிலும் காணி ஏல விற்பனை வருமானம் ரூபா 148,198,712 ஆலும் வெளிநாட்டுக் கண்காட்சிக்கான பெறுகைகள் ரூபா 15,960,964 ஆலும் பரீட்சிப்பிற்கான அறவீடுகள் ரூபா 7,994,692 ஆலும் குறைவடைந்தமை, செயற்திட்ட செலவினம் ரூபா 28,426,450 ஆலும் மோட்டர் வாகனங்களின் பராமரிப்புச் செலவினம் ரூபா 6,557,331 ஆலும் அதிகரித்தமை மற்றும் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 100 மில்லியனால் அதிகரித்தமை என்பன மீளாய்வாண்டின் மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

அதிகாரசபையின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் நிதி மிகையாக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது பற்றாக்குறை காணப்பட்டது. ஊழியர் சம்பளம், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வுகள் என்பவற்றை கவனத்திற்கொள்ளும் போது அதிகாரசபையின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 273,309,778, ரூபா 512,421,306, ரூபா 492,320,370 மற்றும் ரூபா 263,205,729 ஆக இருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பங்களிப்பு 46 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2 சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கை

மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரசபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் 22 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் பிரதான நோக்கங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(i) இரத்தினக்கல் கைத்தொழில் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கான முன்மொழிவுத் திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.

(ii) மேற்படி கைத்தொழிலின் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள ஊழியர்களிற்கு கைத்தொழில் பயிற்சி, விசேடமாக வெப்பமூட்டல் செயன்முறை மற்றும் இரத்தினக்கல் வெட்டுதல் தொடர்பான பயிற்சி என்பவற்றை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் ஆதரவளித்தல்.

(iii) எதிர்காலத்தில் கொள்வனவாளர்கள் மூலம் கைத்தொழிலில் நம்பிக்கைத்தன்மையை உருவாக்குவதற்குத் தேவையான படிமுறைகளை எடுத்தல் மற்றும் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்தெடுத்தல் மற்றும் இலங்கைக்கு வெளியே இரத்தினக்கல் வெளியேற்றப்படல் என்பவற்றைத் தடுத்தல்.

(iv) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் இரத்தினக்கல் சுரங்கங்களின் அகழ்வு ஆராய்ச்சிகளிற்கான அதிகாரத்தை பிரிப்பதற்காக ஒரே அதிகாரமாக செயற்படுவதற்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் விற்பனைக்குத் தேவையான கைத்தொழில் மற்றும் ஏனைய அறிவுரைகள் மற்றும் உதவிகளை வழங்குதல்.

(v) இரத்தினக்கல் கைத்தொழில் தொடர்பான ஏதேனும் பட்டியலிடப்பட்ட சட்டத் தொழிற்பாடுகளை நிர்வாகம் செய்தல் மற்றும் இரத்தினக்கல்லை சான்றுறுதிப்படுத்துதல் மற்றும் விலைமதிப்பற்ற உலோகங்களை பரிசோதனை செய்தல் என்பவற்றிற்காக அலுவகங்களை ஸ்தாபித்தல் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆபரணங்கள் மீது விசேட குறியீட்டை பொறிப்பதை உறுதிப்படுத்துதல்.

(vi) மேற்படி கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் இணைப்பிற்காக அத்தகைய கைத்தொழில்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களிற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல். மற்றும்

(vii) மேற்படி கைத்தொழில்களில் வேலையிலீடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் பாதுகாப்பிற்குத் தேவையான பாதுகாப்பு படிமுறைகளை முறைமைப்படுத்தி கட்டுப்படுத்துதல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேலே விபரிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களில் இல. (ii), (iii) மற்றும் (vi) என்பன கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக்கு வெளியே இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சந்தையை விரிவுபடுத்தும் வகையில் வெளிநாட்டுக் கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்களின் பங்குபற்றல் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஏற்றுமதியாளர்களை தெளிவுபடுத்தி ஊக்கப்படுத்தி உருவாக்குவதற்காக போதியளவான நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 58.5 மில்லியன் தொகையான ஏற்றுமதிக் கண்காட்சிச் செலவினம் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்களின் பங்குபற்றலூடாக ஏற்றுமதி வருமானம் அதிகரித்திருந்ததா என்பதை பரிசோதனை செய்வதற்கு பின்தொடர் வேலைத்திட்டங்கள் காணப்படாமையினால் அச் செலவினத்தின் ஆக்கபூர்வமான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) நகை இறக்குமதியாளர்களிற்கான வசதிகளை வழங்குதல், இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பரிமாற்றத்திற்கான வசதிகளை வழங்கி மேம்படுத்துதல் மற்றும் றட்ணதீப வியாபார நிறுவனத்தினை செயற்படுத்தி முகாமை செய்தல் மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் வியாபார விளம்பரங்களை வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 8 நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்காததுடன் அவற்றின் பௌதீக செயலாற்றல் 20 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்ட அதேநேரம் நிதிச்

செயலாற்றல் 2 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(உ) அதிகாரசபையின் 7 நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் இலக்குகள் அடையப்பட்டிருக்காத போதிலும் நிதிச் செயலாற்றல் 124 சதவீதம் முதல் 305 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

(ஊ) அதிகாரசபையின் 2 நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் இலக்குகளை விஞ்சியிருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் 40 சதவீதம் மற்றும் 51 சதவீதமான தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டன.

(எ) 3 நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் இலக்குகள் மற்றும் 2 நடவடிக்கைகளின் நிதிச் செயலாற்றல் என்பவற்றின் அடைதல்கள் 50 சதவீத ஒழுங்கற்ற மட்டத்தில் காணப்பட்ட அதேநேரம் இது ஒரு நடவடிக்கையில் 22 சதவீதமாக இருந்தது. மேலும், 2 நடவடிக்கைகளின் வருமானமீட்டல்களின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் பெரியளவான இலக்குகளை விஞ்சியிருந்தன.

(ஏ) இயந்திர ரீதியான இரத்தினக்கல் சுரங்க அகழ்வினால் பாரியளவிலான சுற்றாடல் சேதங்கள் அவதானிக்கப்பட்டன. அச் சுரங்கங்களின் புனரமைப்பு வேலைகளின் மந்தமான நிலை சுற்றாடலிற்கும் அதேபோல் மக்களின் சுகாதாரத்திற்கும் மோசமான பாதிப்பை விளைவித்திருந்தது. மேலும், நெற்காணிகளுடன் இணைந்த இரத்தினக்கல் சுரங்கங்கள் பயிர்ச்செய்கை நோக்கத்திற்காக அத்தகைய காணிகளை பயன்படுத்த முடியாததான ஆபத்தை விளைவித்திருந்தது. இரத்தினபுரி மாவட்டத்தில் சுரங்கப் பாதைகளின் விளைவாக மண்சரிவு ஆபத்து அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 210,216 பெறுமதியான 7 மறுக்கப்பட்ட காசோலைகள் பெறப்பட்ட பின்னர் 03 தொடக்கம் 06 வருட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினக்கல் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுடன் இணைவதற்காக இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள்

மற்றும் அதிகாரசபையால் 2009 ஆம் ஆண்டில் ரூபா 92,948,578 மூலதனப் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கம்பனியை பதிவு செய்தல் தவிர்ந்த எந்தவொரு நடவடிக்கையும் கணக்காய்வுத் திகதியான 2017 மே 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பணத்தை அறவிடுவதற்காக 2016 ஆகஸ்ட் 16 அம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 18(2) மற்றும் 18(4) ஆம் பிரிவுகளின் பிரகாரம் இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டங்களிலிருந்து பெறப்படுகின்ற இரத்தினக்கற்கள் அதிகாரசபையால் பெறப்பட்டு அவ் இரத்தினக்கற்களின் விற்பனையிலிருந்து கிடைக்கின்ற பணத்தில் ஒரு பகுதி அரசிறையாக ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பொகவந்தலாவ மற்றும் சீதாவக ஆறுகளின் அனைத்து செயற்திட்டங்களிலிருந்து உழைக்கப்பட்ட ரூபா 184,551,611 தொகையிலிருந்து அரசிறையாக எதுவித பணமும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருமான வரிக் கணிப்பீட்டில் திரண்ட நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 175 மில்லியன் தொகையை கருத்திற்கொள்ளத் தவறியமை காரணமாக ரூபா 43,750,000 வருமான வரி மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) உள்ளகக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுகள் மற்றும் புலனாய்வுகளினூடாக அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சில பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொகவந்தலாவவிலுள்ள செபல்ரன் தோட்டத்தின் இரத்தினக்கல் காணியின் ஏலத்தின் பின்னர் வழங்கப்பட்ட இரத்தினக்கல் சுரங்க அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தலைவரின் அங்கீகாரமின்றி 51 காணித்துண்டுகளிற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிமம் பெற்றவர் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி அங்கீகரிக்கப்படாத சுரங்கங்களை

அகழ்திருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கைகள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காது 2016 மே 20 இலிருந்து செயற்படும் வகையில் ஒரு வருடத்திற்கு இரத்தினக்கல் சுரங்க அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் நீடிக்கப்பட்டிருந்தன.

(ii) 2016 யூலை 21 இல் கெசெல்கமு ஓயாவில் இரத்தினக்கல் சுரங்க அகழ்விற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட சுற்றாடல் அங்கீகாரம் காலாவதியாகியிருந்த போதிலும் காணி ஒதுக்கீட்டினுள் மண் அடுக்குகளை அகற்றுவதற்காக 5 காணித்துண்டுகளின் உரிமம் பெற்றவர்களிற்கு அதிகாரசபை மீண்டும் அனுமதி வழங்கியிருந்தது.

(iii) அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி அதே குற்றங்களை செய்த அனைவர் தொடர்பில் சீரான முறையிலும் சமமான அடிப்படையிலும் இதுவரை செயற்பட்டிருக்காததுடன் குற்றப்பணங்கள் மற்றும் நட்டங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. அறவிடப்பட்ட நட்டங்கள் சாதாரண நிலையில் சுற்றாடலை மீளமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் ஊழியர்களிற்கு கொடுப்பனவு செய்த ரூபா 33,488,255 தொகையான ஊக்குவிப்புப் படிகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2001 ஆம் ஆண்டில் திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயலாற்றலை அடிப்படையாகக்கொண்டு ஊக்குவிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் 2016 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை கட்டளையிட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 33,488,255 தொகை அத்தகைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2001 ஆம் ஆண்டில் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்புப் படி முறைமையின் பிரகாரம், பொது ஒதுக்கங்களின் கீழ் ஊழியரொருவருக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆகக்கூடிய தொகை ரூபா 10,000 ஆகும். ஆனால், ரூபா 58,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டதால் ரூபா 11,952,000 மேலதிகக் கொடுப்பனவை விளைவித்திருந்ததுடன் அடிப்படைச் சம்பளத்திற்குப் பதிலாக மொத்தச் சம்பளத்திற்கு கொடுப்பனவு

செய்யப்பட்டதால் ரூபா 5,202,819 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவுகளிற்காக எந்தவொரு செயலாற்றல் வரையறையும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்காததுடன் உரித்துள்ள விடுமுறைகளின் சேமிப்பு மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. ஏற்கனவேயுள்ள ஊக்குவிப்புப் படித் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் போது 21 நாட்களை விஞ்சிய விடுமுறைகளிற்கான ஊக்குவிப்புக்கள் கழிக்கப்படுதல் வேண்டும். மீளாய்வாண்டிற்கான ஊக்குவிப்புப் படிகள் அந்த ஆண்டின் திசெம்பர் மாதத்திலேயே செலுத்தப்பட்டிருந்ததனால் ஆண்டிற்குரிய மொத்த விடுமுறை கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) ஊக்குவிப்புப் படிகள் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் இது மதிப்பீடு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 43,939,387 வரிக்குப் பின்னரான நட்டம் ஏற்பட்ட போதிலும் ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(vi) இரத்தினக்கல் சுரங்க அகழ்வு செயற்திட்டங்களின் தேறிய வருமானத்தில் ரூபா 3,618,510 ஊக்குவிப்புப் படிகளாக மீளாய்வாண்டின் போது அனைத்து ஊழியர்களுக்கும் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதே போல் வருடாந்த ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவில் செயற்திட்ட வருமானம் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவின் போது அவ் வருமானம் இருமுறை எடுக்கப்பட்டிருந்தது.

### 4.4 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்கொன்று 2015 செப்தெம்பரிலிருந்து செயற்பாடற்றிருந்ததுடன் கணக்கிலுள்ள மீதி ரூபா 325,676 தொகையாக இருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 282 ஆனதுடன் உள்ளபடியான பதவியணியினர் 274 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத 15 அமைய உத்தியோகத்தர்களையும்

ஒப்பந்த அடிப்படையிலான ஒரு உத்தியோகத்தரையும் உள்ளபடியான பதவியணி உள்ளடக்கியிருந்தது.

(ஆ) ஆரம்பத்தர உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 61 ஆக இருந்த அதேநேரம் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி 5 உத்தியோகத்தர்கள் நிரந்தரப் பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகளுடன் சேர்த்து வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் அண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கை 2017 மே 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டினை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளும் செயன்முன்னேற்றத்தினை பரீட்சிப்பதற்காக முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்கீட்டுப் பதிவேடுகள், பட்டியல்கள் மற்றும் பதிவுகளின் நம்பகத்தன்மை பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பரிசோதனைகள்

உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்விற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(1) மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 ஒக்தோபர் 07 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(3) ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட 1120 ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் அதே போல் கணக்காய்வுக் கோட்பாடுகள் என்பவற்றிற்கு முரணாகவும் சுதந்திரத் தன்மையை பாதிக்கும் வகையிலும் உள்ளகக் கணக்காய்வாளர் அதிகாரசபையின் ஏலவிற்பனையிலும் திடீர் பரிசோதனை பிரிவின் நடவடிக்கைகளிலும் பங்குபற்றியிருந்ததுடன் இது தொடர்பில் படிகளையும் பெற்றிருந்தார். மேலும், உள்ளகக் கணக்காய்வாளர் பங்குபற்றியிருந்த சில கடமைகளை பரிசோதனை செய்த போது அவை உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டோ அல்லது உள்ளகக் கணக்காய்விற்குட்பட்டோ இருக்காதமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இரண்டு மேலதிக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 35 நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.5 ஒப்பந்தம் மற்றும் கொள்வனவு நடைமுறைகள்

களனி ஆறு கத்துவ வத்தையை சுற்றி அங்கீகாரமற்ற இரத்தினக்கல் சுரங்க அகழ்வை தடுக்கும் வகையில் இணைந்த இரத்தினக்கல் சுரங்க அகழ்வுச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக தனியார் தொழில்முயற்சியாளரை தேர்ந்தெடுப்பதற்காக கூறுவிலைகள் கோரி புதினப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்திற்காக தீர்மானிக்கப்பட்ட மிகக்குறைந்த விலைமனு ரூபா 40,000,000 ஆக காணப்பட்டது. கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.3.13 (ii) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அதற்காக விலைமனு உத்தரவாதம் ரூபா 200,000 அல்லது ரூபா 400,000 தொகையான போதிலும் ரூபா 1,000,000 விலைமனு உத்தரவாதம் பெறப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 7.10.1 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு நிதி சாத்தியத்தன்மை மற்றும் இரத்தினக்கல் துறையில் அனுபவம் என்பன இல்லாது தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்

செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தியிருக்காததுடன் அதிகாரசபை அங்கீகாரமற்ற இரத்தினக்கல் சுரங்கம் அகழ்பவர்களிடமிருந்து காணியை பாதுகாப்பதற்கு மேலதிகக் கிரயத்தை தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

### 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கிடையில் 11 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சிலும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கிடையில் 11 சதவீதம் முதல் 7371 சதவீதம் வரையான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவிற்கு முரணாக 60 வயதை விஞ்சிய உத்தியோத்தரொருவர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் 2012 ஒக்தோபரிலிருந்து செயற்படும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளராக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது . அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | தாமதங்களின்றி சேகரிக்கப்பட்ட பணத்தை வங்கியிலிடத் தவறியமை மற்றும் புத்தகங்களை பேணத் தவறியமை |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) திடீர் சோதனைகள் தொடர்பான தகவல்களை பேணுதல், அறிக்கையிடுதல் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |

(ii) அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாட்டை முறைமைப்படுத்த தவறியமை.

(iii) நிதிப்பிரமாணம் 169(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தவறியமை.

(iv) கணனி முறைமையில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டமை மற்றும் அவற்றை முறையாக சேமிப்பகத்தில் வைக்கத் தவறியமை காரணமாக பெறுவனவுப் புத்தகத்தை பாவிப்பதை மீளக் கொண்டுவருதல் மற்றும் முறையாக களஞ்சியங்களை பேணத் தவறியமை.

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(i) இருப்புப் பதிவேட்டு மீதிக்கும் பௌதீக ரீதியான இருப்புக்கும் இடையே பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் காணப்படுதல்

(ii) அதிகாரசபையின் பொருட்களின் கொள்வனவுகள் மற்றும் அழிவடைந்த பொருட்களை ஏலவிற்பனை செய்தல் மற்றும் வழங்கல் முகாமையாளரின் பொறுப்பின் கீழ் களஞ்சியப் பிரிவுகளை பேணுதல்.

(ஈ) பதவியணியினர் நிர்வாகம்

(i) ஊழியர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தத் தவறியமை

(ii) வருடாந்த மதிப்பீட்டிற்கு நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்களின் செயலாற்றலை உட்படுத்த தவறியமை

(iii) வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தவறியமை.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி